## 12.3 அண்ணா மறுமலர்ச்சி திட்டம் – 1998–99 – திட்ட செயல்பாட்டிற்கான கூடுதல் வழிகாட்டி நெறிமுறைகள்

சுற்றறிக்கை

எண்.13724/98/பொ.சு.1 நாள் : 08.06.1998

பொருள் : அண்ணா மறுமலர்ச்சி திட்டம் 1998–99 – செயலாக்கம் – திட்ட செயல்பாட்டிற்கான வழிமுறைகள் குறித்து

பார்வை : அரசு ஆணை நிலை எண். 113, ஊ.வ. (ஒ. ஊ.வ.1), துறை, நாள்–01.06.1998

பார்வையில் கண்டுள்ள அரசாணைகளில் இத்திட்ட செயலாக்கத்திற்கான விரிவான நெறிமுறைகள் வெளியிடப்பட்டன. இத்திட்டம் வெற்றிகரமாக செயல்பட கீழ்க்கண்ட நடவடிக்கைகளை மேற்கொள்ள மாவட்ட ஆட்சித் தலைவர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

1. ஒவ்வொரு அண்ணா மறுமலர்ச்சி கிராமத்திற்கும் ஒரு ஒருங்கிணைப்பாளர் துணை மாவட்ட ஆட்சியாளர் நிலையில் உடனடியாக நியமிக்கலாம்.
2. முதல் கட்டமாக வட்டார வளர்ச்சி அலுவலர் மற்றும் வட்டாட்சியர் அண்ணா மறுமலர்ச்சி கிராமத்திற்கு 17.06.1998க்கு முன்னால் சென்று திட்ட செயலாக்கத்தை எடுத்துரைத்து மக்களை திட்டத்திற்கு தயார்படுத்த வேண்டும்.
3. கிராமத்தின் வளங்கள் மற்றும் அடிப்படை வசதிகள் குறித்து துரிதமான கணக்கெடுத்து 25.06.1998க்குள் அறிக்கை தயாரிக்கப்பட வேண்டும்.
4. மாவட்டத்திலுள்ள அனைத்து அண்ணா கிராம மறுமலர்ச்சி திட்ட கிராமங்களில் மக்கள் குறை தீர்க்கும் கூட்டம் ஒரே நாளில் உரிய விளம்பரத்திற்கு பின் 22.06.1998 அன்று ஒருங்கிணைப்பாளரால் நடத்தப்பட வேண்டும். மாவட்ட ஆட்சியர் / திட்ட அலுவலர் / மாவட்ட வருவாய் அலுவலரும் ஒவ்வொரு கிராமத்தில் மக்கள் குறைதீர்க்கும் நாள் நடத்தப்பட வேண்டும்.
5. அடுத்த கட்டமாக ஒருமுகப்படுத்தப்பட்ட திட்டங்களையும் சிறப்புத் திட்டங்களையும் இணைத்து தற்காலிகத் திட்டம் 15.06.1998க்குள் தயார் செய்யப்பட வேண்டும்.
6. இவ்வாறு தயாரிக்கப்பட்ட தற்காலிக திட்டத்தை கிராம சபா முன்வைத்து ஒரு சிறப்புக் கூட்டம் ஊராட்சி தலைவரால் நடத்தப்பட வேண்டும். ஒருங்கிணைப்பாளர்கள், வட்டார வளர்ச்சி அலுவலர்கள், வட்டாட்சியர்கள் வளர்ச்சி மற்றும் வருவாய்த் துறையைச் சார்ந்த களப்பணியாளர்கள் கிராம சபை நடத்துவதற்கு மக்களை திரட்டவும் பணிகளை முன்னுரிமைப்படுத்தி கருத்துருக்கள் முடிவாக்கப்பட உதவி செய்ய வேண்டும். இவ்வாறு தயாரிக்கப்படும் மாதிரி கிராம திட்டம் கிராம சபையில் ஒப்புதல் பெறப்பட வேண்டும். இது போன்ற கிராம சபை ஒரே நாளில் அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சி கிராமத்திலும் நடத்த வேண்டும். மாவட்ட ஆட்சியர் / திட்ட அலுவலர் / மாவட்ட வருவாய் அலுவலரும் ஒவ்வொரு கிராமத்தில் கலந்து கொள்ள வேண்டும். கிராம சபை நடக்கும் விபரம், நோட்டீஸ் மற்றும் மாவட்ட ஆட்சியர் பத்திரிக்கை செய்தியில் விளம்பரப்படுத்த வேண்டும்.
7. அவ்வாறு அனுமதிக்கப்பட்ட அண்ணா மறுமலர்ச்சிக் கிராமத் திட்டக் கருத்துருக்கள் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையில் 06.07.1998க்குள் தொகுக்கப்பட வேண்டும்.
8. ஒருங்கிணைந்த திட்டத்தை மாவட்ட அளவுக் குழுவில் 15.07.1998க்குள் வைத்து ஒப்புதல் அளிக்கப்பட வேண்டும்.
9. இத்திட்டங்களக்கு நிர்வாக ஒப்பளிப்பு மாவட்ட ஆட்சித் தலைவர்களால் 20.07.1998க்குள் அளிக்கப்பட வேண்டும்.
10. கிராம சபையில் இத்திட்டத்திற்கான ஒப்புதல் அளிக்கப்பட்டவுடனே பணிகளுக்கான மதிப்பீடுகள் தயாரிக்கப்பட வேண்டும். எனவே இதனால் காலதாமதம் ஏற்பட வாய்ப்பில்லை.
11. நிர்வாக ஒப்படைப்பு கொடுக்கப்பட்டவுடன் தொழில் நுட்ப அனுமதி 20.07.1998க்குள் அனுப்பப்பட வேண்டும்.

12. ஒப்பந்தப்புள்ளி கோருதல் மற்றும் பணி ஒப்படைப்பு முடிவு செய்தல் 20.08.1998க்குள் முடிக்கப்பட வேண்டும்.

13. திட்டப் பணிகள் 30.08.1998க்குள் முன்பு துவங்கப்பட வேண்டும்.

14. அண்ணா மறுமலர்ச்சி திட்ட கிராமங்களினால் ஊராட்சி மன்ற உறுப்பினர்கள் மற்றும் நன்மதிப்புள்ள கிராம பெரியோர்கள் அடங்கிய கண்காணிப்புக் குழு அமைக்கலாம்.

**பொது**

1. அண்ணா மறுமலர்ச்சி கிராமங்களில் இத்திட்டங்கள் பரவலாக விளம்பரப்படுத்தப்பட்ட மக்கள் குறை தீர்க்கும் நாட்களும் கிராம சபா கூட்டங்களும் ஒரே நாளில் நடைபெற வேண்டும்.

2. கிராம மக்கள் இத்திட்டங்களை புரிந்து கொள்ளும் வகையில் மாவட்ட ஆட்சித் தலைவர்கள் கிராம சபா மற்றும் மக்கள் குறை தீர்க்கும் கூட்டங்களுடைய நேரம் மற்றும் தேதியினை பத்திரிக்கை வாயிலாக தெரியப்படுத்தப்பட வேண்டும். பல்வேறு கட்ட நடவடிக்கைகள் ஆவணமாக்குதல் நல்லது.

மாவட்ட ஆட்சியர்களும் திட்ட அலுவலர்களும் மேலே கண்ட பணி பட்டியல்படி கால அட்டவணையை அனுசரித்து பணியை துரிதப்படுத்த கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

ஊரக வளர்ச்சி இயக்குனர்